தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## விசாரணை நாள் 06.10.2026

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 6978-E-2024**

| | | |
|---|---|---|
| திரு கே.காளிதாஸ் | .. | மேல்முறையீட்டாளர் |
| | */எதிர்/* | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>இணை இயக்குநர் (ஊராட்சிகள்),<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை | .. | பொது அதிகார அமைப்பு |

******

## இறுதி ஆணை

1) இவ்வாணையத்தின் 07.09.2026 நாளிட்ட ஆணையை தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக இணை இயக்குனர் (ஊராட்சிகள்) திரு சிவ.தினகரன் இவ்வாணையத்தில் 06.10.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுபடி, மனுதாரருக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு கோ.இராமதாசிடமிருந்து பெறப்பட்ட எழுத்து மூலமான விளக்கத்தை ஆணையத்தில் சமர்ப்பித்தார். அந்த விளக்கத்தில், 2023-ம் ஆண்டு, கிராம ஊராட்சிகளின் கணக்குகளை மின்னணு உருவாக்கம் செய்து “தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட கணக்குகள்” (TNPASS) என்கிற புதிய இணையதளம் தோற்றுவித்தல் மற்றும் கிராம ஊராட்சிகளின் வரவினங்கள் யாவும் இணையதளம் வாயிலாக பெறும் VPTAX Portal முறைமை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நடைமுறைகள் ஆகிய பணிகள் ஊராட்சிகள் பிரிவில் மேற்கொள்ளப்பட்டதால், மனுதாரருக்கு தகவல் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாகவும், இனி வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நிகழாது என்றும் தெரிவித்துள்ளார்.

2) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு கோ.இராமதாஸ் அளித்துள்ள விளக்கத்தை ஏற்கிறது. எனினும், வரும் காலங்களில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பப்படும் மனுக்களுக்கு உரிய காலத்தில் பதில் வழங்க வேண்டுமென அவரை இவ்வாணையம் எச்சரித்து இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 6978-E-2024**

**பெறுநர்**

1) பொதுத் தகவல் அலுவலர்/
இணை இயக்குநர் (ஊராட்சிகள்),
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பனகல் கட்டடம், சைதாப்பேட்டை,
சென்னை - 600 015

2) அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்/
இணை இயக்குநர் (ஊராட்சிகள்),
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக)

3) திரு காளிதாஸ்,
எண்.422-ஏ, பிரதான சாலை,
ஓறையூர் - 607 108
பண்ருட்டி வட்டம்,‘
கடலூர் மாவட்டம்

Copy to file
CR/PA